


கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு,கரூரில் கலைஞர் தொலைக்காட்சி நடத்திய கவியரங்கம், கவிச்சுடர். கவிதைப்பித்தன். தலைமையில் நடைபெற்றது. கவியரங்கத்தில் கவிஞர் வீ.ம,இளங்கோவன், கவிஞர் இரா,தனிக்கொடி. கவிஞர் மணவை தமிழ் மணவாளன்,கவிஞர் ஆ,மரியஎட்வின், சல்மா,மகாலெட்சுமி , ஆகியோர் கவிதை படைத்தனர்.

## திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க.

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை எழுச்சி நாளாக கொண்டாடுவோம்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பூர், நவ. 27 -

திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, பகுதி பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் 15.11.2024 அன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியலவில் திருப்பூர் ராஜாராவ் வீதியில் அமைந்துள்ள வடக்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் பவள விழா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்ட கழகச் செயலாளரும், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான க.செல்வராஜ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினர். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ் வரவேற்புரையாற்றினார், வடக்கு மாநகரச் செயலலார், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் வடக்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.முத்துக்குமார், மாவட்ட துணை அமைப்பாளர்கள் த.சசிகுமார், த. சசிகுமார் ஞானசிகாமணி, ப.ரவிச்சந்திரன், செ.ராஜசேகரன்,உ.லிங்கேஸ்வரன், வடக்கு மாநகர துணை அமைப்பாளர்கள் ஆ.வஞ்சிமுத்து, அ.பார்த்திபன் நா.தியாகு, தெற்கு மாநகர துணை அமைப்பாளர்கள் ம.அசோக்குமார், கா. 0சையது அபுதாஹிர், மு.விக்னேஷ்குமார் க.திருநா வுக்கரசு, கு.அரவிந்த் உள்பட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தின் இறுதியில் தெற்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ். ஆர்.ராஜு நன்றியுரையாற்றினார்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

களப் பணியிலும் அரசுப் பணியிலும் ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருக்கும் நமது இளம் தலைவர் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அவரை தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் ஆக பொறுப்பு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு இக் கூட்டம் தனது நன்றி கலந்த பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறது .

உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வர் பணி சிறக்க வாழ்த்துக்கள்!

ஒற்றை செங்கல்லை உயர்த்திப் பிடித்து மதவாத பாசிச ஒன்றிய அரசை ஓட விட்டது போல், தலைவர் கலைஞரைப் போல ஒற்றை பதில்களில் ஒட்டு மொத்த மீடியாக்களையும் மௌனமாக்கியவர் நமது இளம் தலைவர் அவர்கள், தான் கலைஞரின் பேரன் என்பதை ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் இந்திய ஒன்றியத்திற்கு நினைவூட்டி வருகிறார். பெரியாரும், அண்ணாவும் கலைஞரும் உயர்த்திப் பிடித்த சனாதன ஒழிப்பு முழக்கத்தை, சிறிதும் அச்சமின்றி, துணிவோடு, சாதிய பாகுபாடு பெண் அடிமைத்தனம் உள்ளிட்ட பிற்போக்கு சிந்தனைகளை கொண்டிருக்கும் சனாதன கோட்பாடுகளை ஒழிக்க வேண்டும் என்று முழக்கமிட்டு சனாதனவாதிகளுக்கு சம்மட்டி அடி கொடுத்திருக்கிறார். 2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பேற்கும் பொழுது பேரறிஞர் அண்ணாவின் வழியில், (I belong to the Dravidian stock) என்று உறக்க முழக்கமிட்டு மதவாத பாசிஸ்டுகளுக்கும், தமிழ் தேசியம் என்று போலி முழக்கமிடும் காளான்களையும் ஒற்றை ஆளாக கதறவிட்டவர். தன் தலைக்கு பத்து கோடி அறிவித்த சாமியாருக்கு பதில் அளிக்கும் வகையில் 10 கோடி தேவையில்லை 10 ரூபாய் சீப்பு போதும் என் தலையை நானே சீவிக் கொள்கிறேன் என்று கலைஞர் வழியில் நகைச்சுவையுடன் எதிரிகளின் முகத்தில் ஓங்கி அறைந்தார். 2019, 2021 2024 தேர்தல் பிரச்சாரங்கள், இளைஞர் அணி திராவிட மாடல் பயிற்சி பாசறை கூட்டம், கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப்போட்டி, முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டி, இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை, செஸ்ஒலிம்பியாட்,கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டி, ஃபார்முலா கார் பந்தயம் என தளபதி வழியில் உழைப்பு உழைப்பு உழைப்பு என்று கணக்கிலடாங்க சாதனைகளோடு உழைத்துக் கொண்டிருக்கிறார். சிறிதும் தொய்வின்றி, திராவிட இயக்கத்திற்காக திராவிடத்திற்காக அயராது உழைத்த பெரியார், அண்ணா, கலைஞர், தளபதி ஸ்டாலின் ஆகியோர் வழியில் ஒரு மாபெரும் கொள்கை வாதியாக எளிய தொண்டனாக தமிழ்நாட்டு மக்களின் துணை முதல்வராக உழைத்துக் கொண்டிருக்கும் இளம் தலைவர் அவர்களுக்கு இந்த கூட்டம் துணை முதல்வர் பணி சிறக்க வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை நவம்பர் 27 ல் இளைஞர் அணி சார்பில் கழக இரு வர்ணக் கொடியேற்றியும், இனிப்புகள் வழங்கியும், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் வாரியாக திராவிட மாடல் பயிற்சி பாசறை கூட்டங்களை நடத்தியும் கொண்டாடிட வேண்டும். ஏழை எளிய மக்களுக்கு உதவிடும் வகையில் விளையாட்டுத் துறையில் இந் நூற்றாண்டில் வியக்கத்தக்க சிறப்பு பெற்றிருக்கும் நமது தமிழ்நாட்டில், மாணவ, மாணவியர், இளைஞர்களுக்கும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தியும், மரக்கன்றுகள் நட்டும், ரத்ததான முகாம், பொது மருத்துவ முகாம் மற்றும் இலவச கண் சிகிச்சை முகாம்களை நடத்தியும், அரசு பள்ளிகளில் பயிலும் ஏழை, எளிய மாணவ, மாணவியர்களுக்கு நோட்டுப் புத்தகம் வழங்கியும், ஆதரவற்ற மக்கள் வசிக்கும் இடங்களில் அவர்களுக்கு உணவு, உடை வழங்குதல் என மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணியை சேர்ந்த ஒவ்வொரு அமைப்பாளர்களும், துணை அமைப்பாளர்களும் தங்களால் இயன்ற அளவுக்கு மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் நலத்திட்ட உதவிகளை செய்திட வேண்டும் என்பதோடு அனைத்து அமைப்பாளர்களும் முனைப்போடு செயல்பட்டு கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை மக்களுடன் இணைந்து எழுச்சியோடு சிறப்பாக கொண்டாடுவது என இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை அண்ணா பகுத்தறிவு மன்றத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 21 வது நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம் முருகன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் உடன் மயிலாடுதுறை நகர கழக செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ வின்சென்ட் அரசு வழக்கறிஞர் இராமசேயோன்,மயிலாடுதுறை நகர்மன்ற துணைத் தலைவர் குமார், மாவட்ட பிரதிநிதி சடகோபன் மற்றும் பலர் உள்ளனர்.

# உதயநிதி மாசற்ற முத்து, தமிழர்களின் சொத்து!



தமிழ்நாட்டின் இதயத் துடிப்பாம்!
கழகத்தின் கொள்கை பிடிப்பாம்!
திராவிடக் களஞ்சியமாம்!
சுயமரியாதைச் சுடரொளியாம்!
எதிர்கால விடிவெள்ளியாம்!
ஏழைகளின் கூட்டாளியாம்!
தந்தை சொல் தட்டா தனையனாம்!
தன்மானத்திற்கு இழுக்கென்றால்
பொசுக்கிடும் தீச்சுடராம்!
இளைஞரணி தந்திட்ட இளஞ்சூரியனாம்!
எதிரிகள் நடுங்கும் எரி தழலாம்!
தலைவர் பெற்றெடுத்த முத்தாம்!
ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் இவர் சொத்தாம்!

ஒற்றை செங்கல்லை தூக்கிக் காட்டினார்
தில்லி ஓலமிட்டது!
செஸ் ஒலிம்பியாட்டை நடத்திக்காட்டினார்,
மக்கள் கரவொலி விண்ணைத் தொட்டது!
சிறுபான்மையினருக்கு எதிராய்
பாசிச கும்பல் எக்காளமிட்டது!
சனாதானத்தை பற்றி இவர்
எடுத்துரைத்தது கருத்தாழமிக்கது!
எதிரிகள் விளையாட்டாய் நினைத்துக்கொண்டிருக்க,
விளையாட்டுத்துறை அமைச்சரானார்.
வீதியில் கிடந்த திறமைகளை
கண்டெடுத்தார்! ஊக்குவித்தார்!
அவர்கள் வென்று குவித்த பதக்கங்களால்
தமிழ்நாட்டை அலங்கரித்தார்!

தொகுதிக்கொரு கலைஞர் நூலகம் அமைத்து
அறிவுச்சுடரை வளர்த்தார்!
ஒப்பற்ற தலைவருக்கு உறுதுணையாய்
ஓய்வறியா உழைப்பால் துணை முதல்வரானார்! மகளிர் உரிமைத்தொகை,மகளிர் விடியல் பயணம் என தலைவரின் பொன்னான திட்டங்கள் உரியவர்களை
சென்றடைகிறதா
எனப் பார்த்து,பார்த்து ஏழைகளின்
கண்ணீர் துடைத்தார்!

மக்கள் நலனுக்கே தன்னை ஒப்புக்கொடுத்தார்! கழகத்துக்கே தன்னை தத்துக்கொடுத்தார்!
தேர்தல் பரப்புரைகளில் மக்களுக்காக,
மக்கள் மொழியில் பேசி பின்னியெடுத்தார்! சமத்துவம் மற்றும் சமூக நீதிக்கு எதிராக நிற்கும் காவிக் கும்பலின் முகத்திரையை கிழித்தெறிந்தார்! திராவிடத்துக்கு எதிராக பேசும் எவரும் அக்கும்பலின் B டீம் தான்
என்ற உண்மையை போட்டுடைத்தார்!

முத்தமிழறிஞர் கலைஞரின் போர்க்குணத்தை நெஞ்சில் இருத்தினார்!
கழகத்தலைவர் வைத்த அத்தனை டெஸ்டிலும் சிக்சர் அடித்தார்!
எதிர் வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகள் என்ற தலைவரின் கட்டளையை நிறைவேற்ற சபதமெடுத்தார்!
அவர் தான் திராவிட மாடலின்
இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் !

கழகமும்,மக்களும் இரு கண்களென
ஓய்வின்றி உழைத்து வரும் மாண்புமிகு
தமிழ்நாடு துணை முதலமைச்சரும்,
கழக இளைஞர் அணி செயலாளருமான,
இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்தி வணங்குகிறேன்.

காத்திருக்கிறது கழகப்பணி,
களம் இறங்குவது இளைஞர் அணி!
7 ஆம் முறை கழக ஆட்சி !
திராவிட மாடலின் வெற்றிக்கு அதுவே சாட்சி !

**முன்னாள் அமைச்சர்**
**முனைவர் பி.பழனியப்பன்**
செயலாளர்
தருமபுரி மேற்கு மாவட்ட
தி.மு.க.





திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கொரடாச்சேரி பேரூராட்சி பகுதி சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டைகளை மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினார் , ஒன்றிய துணை பெருந்தலைவர் ஆர்.பாலச்சந்திரன், பேரூராட்சி தலைவர் திருமதி.கலைச்செல்வி செல்வகுமார், பேரூர் கழக செயலாளர் பூண்டி.கே,கலைவேந்தன், அரசு அதிகாரிகள், வியாபாரிகள், பேரூராட்சி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மணப்பாறை இரா. வீராசாமி
### நவம்பர் 27 (2010)



மணப்பாறை நகரத்திற்குட்பட்ட வட்டக் கிளைக் கழகச் செயலாளராக பணியாற்றி, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

1986ல் மணப்பாறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

மும்முனைப் போராட்டத்திலும் – இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் பங்கேற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கரூர் வாசுகி முருகேசன்
### நவம்பர் 27 (2009)



கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் துடிப்புமிக்க வீராங்கனையாக கழகத்தில் செயலாற்றி; கழகத்தின் மீதும் தலைவர் கலைஞர் மீதும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவராக விளங்கினார்.

கழகம் கட்டளையிட்ட போராட்டத்தில் எல்லாம் கலந்து கொண்டு இன்முகத்துடன் சிறை சென்ற ஆற்றல்மிகு வீராங்கனையாகத் திகழ்ந்தவர்.

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, தனது இறுதிமூச்சு வரை இரவுபகல் பாராமல் ஓய்வின்றி உழைத்தவர்.

1996ஆம் ஆண்டில் சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

“பெரியாரும் அண்ணாவும் கண்ட பெண்ணுரிமைக்கோர் எடுத்துக்காட்டாய் அரிதாகச் சில வீர மகளிர் அணிவகுக்கும் வரிசையிலே ஆற்றல்மிகு வீராங்கனையாக வாய்த்தவரே! அண்ணன் நானிருக்க; ஆயிரமாயிரம் அன்பு உடன்பிறப்பனையார் கதறியழ எமைப் பிரிந்து ஏன் மறைந்தாய்? ஆறாதம்மா இந்தப் புண் எம் நெஞ்சில் என்றைக்கும் நினைவுவடுவாக வாசுகி நீ நிலைத்திருப்பாய்!” என்று தலைவர் கலைஞர் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**